[1981 ஏப்ரல் 15

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியோடு புதிதாக சேர்க்கப்பட்டிருக்கின்ற, 1978 ஆம் ஆண்டுக்கு முன்பாக வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியப் பிரிவாக இருந்த 32, 33 ஆம் வட்டங்களில் பஞ்சாயத்துப் பிரிவாக இருந்தபோது, மின்சார மோட்டார்களை வைத்து சிறுசிறு தண்ணீர் திட்டங்களை நிறைவேற்றி வந்தார்கள். இன்றைக்கு மாநகராட்சியோடு சேர்க்கப்பட்ட பிறகு, தண்ணீர் தட்டுப்பாட்டின் காரணமாக, அந்தப் பகுதி மக்கள் பல அல்லல்களுக்கும், தொல்லைகளுக்கும் ஆளாகும் நிலைமையில் இருக்கிறார்கள். அப்படி இருக்கின்றபோது, 10-க்கும் மேற்பட்ட மின்சார மோட்டார்களை பழுதுபார்த்து, மற்றும் மதராஸ் மெட்ரோபாலிடன் வாட்டர் சப்ளை அண்டு சுவரேஜ் போர்டு மூலமாக உடனடியாக இப் பணி தற்காலிகமாக நிறைவேற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

வடகரை கிராம மேட்டுக்கால் பாதை ஓரமாகச் செல்லும் கால்வாய்.

வினா எண். 700 – திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தென்காசி தாலுக்கா வடகரை கிராமத்தில் செங்குளம் டேங்கிலிருந்து கருப்புசாமி கோவில் வரையுள்ள மேட்டுக்கால் ரோட்டின் ஓரமாகச் செல்லுகின்ற கால்வாயை அகலப்படுத்தி தனியார் ஆக்கிரமிப்புகளைத் தடுத்து கல்வர்ட் கட்டவும் மேற்படி கால்வாய் செல்லுமிடங்களிலுள்ள பத்து மடைகளையும் புதுப்பித்துக் கட்டித் தரவும் செயற்குறிப்பு ஏதும் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மேட்டுக்கால் வாய்க்காலின் சிறப்பு மராமத்துப் பணி சமீபத்தில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டது என்றும், வாய்க்காலில் போதுமான அளவு தண்ணீர் செல்ல தற்போதுள்ள அகலமே போதுமானது என்றும் சிறுபாசனத் தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார். இது போன்ற இடங்களில் போக்குவரத்திற்கு சிறுபாலங்கள் (culverts) கட்டுதல் நெடுஞ்சாலை மற்றும் ஊரக வளர்ச்சித் துறையைச் சேர்ந்தது.

1981 ஏப்ரல் 15]

ஆக்கிரமிப்பு சம்பந்தப்பட்ட வரையில், வாய்க்காலின் மேல் பகுதியிலுள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு விட்டதாகவும், மற்ற இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் சிறுபாசன தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார். மதகுகளைப் புதுப்பிக்க செயற்குறிப்பு ஏதும் இல்லை.

திரு ஏ. சாகுல் ஹமீது : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேட்டுக்கால் பகுதியில் குறிப்பாக, தலையிலிருந்து வடகரைக்கு வருகிற மேட்டுக்கால் பகுதியில் ஏற்பட்டிருக்கின்ற தடைகளை அகற்றியிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஓரளவுக்கு அந்தப் பணி நடந்திருக்கிறது. ஆனால், பூரணமாக அந்தப் பணி நிறைவேற்றப்படவில்லை. இன்னும் அந்தப் பகுதியில் தடைகளை அகற்ற வேண்டிய வேலைகள் இருக்கின்றன. அதை நிவர்த்திக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே இராஜா முகமது : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற குறிப்பின் படி மேட்டுக்கால்வாயின் பகுதிகளில் இருந்த தடைகள் நீக்கப் பட்டிருக்கின்றன. வேலை முடிந்துவிட்டது என்று குறிப்பு தரப் பட்டிருக்கிறது. திருப்திகரமாக இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் கருதுவார்களானால், அதுகுறித்து அரசு பரிசீலனை செய்யத் தயாராக இருக்கிறது.

திரு. ஏ. சாகுல் ஹமீது : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பாசனத் துறை சம்பந்தமாக மேலும் பரிசீலனை செய்யப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு அந்தப் பகுதி மக்களின் சார்பாக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலக வங்கி உதவியுடன் பாசனக் குளங்களை நவீனப்படுத்தும் திட்டம்.

*வினா எண். 701— திரு. பொ. விஜயராகவன்: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 500 ஏக்கருக்கும் அதிகமாக உள்ள ஆயக்கட்டுகளுக்கு பாசன வசதி தரும் குளங்களை உலக வங்கியின் உதவி கொண்டு நவீனப்படுத்தும் திட்டம் ஏதேனும் அரசின் கருத்திலுள்ளதா?